29.01.2026 OS.No.257/2023 PW1 Name :.**கலீமுல்லா**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்குரையில் என்னுடைய பிரமாண பத்திரத்திலும் நான் என்ன தொழில் செய்கிறேன் என்பதை கூறியுள்ளேன். அதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியிடம் சேர்ந்து நான் வியாபாரம் செய்துள்ளேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி என்னுடைய உறவினர் என்பதால் அவருடன் நான் தொடர்பில் இருந்தேன் அவ்வப்போது என்னிடம் பணம் பெற்றுக்கொண்டு தொழில் செய்து திருப்பி கொடுப்பார்.
2. பிரதிவாதி என்னுடைய உறவினர் என்ற விவரத்தை வழக்குரையிலும் பிரமாண பத்திரத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சி.எம்.சி.யில் பெயிண்ட் பொருட்கள் சப்ளை செய்வதற்காக பணம் தேவைபடுவதாக என்னிடம் ரூ.8,00,000/- பெற்றுள்ளார். அதற்கான ஆவணங்கள் எதையும் பிரதிவாதி என்னிடம் காட்டவில்லை. அந்த தொழில் தொடர்பான மொத்த மதிப்பு விவரம் எதையும் பிரதிவாதி என்னிடம் சொல்லவில்லை. அந்த தொழில் தொடர்பாக பிரதிவாதிக்கும் எனக்கும் இடையில் எந்த ஒரு ஒப்பந்தமும் இல்லை.
3. பிரதிவாதிக்கு கையில் ரொக்கமாக பணம் கொடுத்துள்ளேன் என்ற விவரத்தை வழக்குரையிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை. நான் மதராசாவில் ஆசிரியாக உள்ளேன். எனக்கு

ரூ.15,000/- மாதம் சம்பளம் கிடைக்கிறது. 2005 ஆண்டு முதல் அந்த வேலை செய்கிறேன். ஆரம்பத்தில் ரூ.6000/- மாதம் சம்பளம் பெற்றேன். தற்போது படிப்படியாக உயர்ந்து உள்ளது. அதை தவிர்த்து மசூதியில் இமாமாக உள்ளேன். அதன் மூலம் எனக்கு மாதம் ரூ.10,000/- வருமானம் கிடைக்கிறது.

4. நான் குடும்பத்துடன் உள்ளேன். பிரதிவாதிக்கு ரூ.8,00,000/- பணம் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் வசதி வாய்ப்புகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எந்த தேதியில் காசோலைகளை எனக்கு கொடுத்தார் என்பதை வழக்குரையிலும் பிரமாண பத்திரத்திலும் கூறியுள்ளேன். 4 காசோலைகளும் ஒரே நாளில் கொடுக்கபடவில்லை. வெவ்வேறு நாட்களில் கொடுத்தார். 23.01.2023ல் முதல் காசோலையை பிரதிவாதி கொடுத்தார்.

5. காசோலையிலும் அதே தேதி தான் உள்ளது. அதை 30ம் தேதி வங்கியில் போட்டேன். 2வது காசோலை 25ம் தேதி கொடுத்தார் அதை 31ம் தேதி வங்கியில் போட்டேன். காசோலை வசூலாகாமல் திரும்பியது குறித்து பிரதிவாதியிடம் கேட்டபோது வங்கியில் பணம் போட்டுள்ளதாகவும் மீண்டும் சென்று சரிபார்க்கவேண்டும் என கூறினார். பிரதிவாதி என்னிடம் பெற்றுள்ள பணத்திற்காக தான் காசோலைகளை கொடுத்தார்.

6. குறிப்பான காரணம் எதுவும் கூறவில்லை. வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 5 காசோலைகள் தான் அவையாகும். அவற்றை பிரதிவாதி தேதி நிரப்பாமல் கொடுத்து தேதியை கூறி பூர்த்தி செய்து வசூலுக்கு போடுமாறு என்னிடம் கூறினார். பிரதிவாதியிடம் புதையல் எடுத்து கொடுப்பதாக நான் ஏமாற்றி கூறி அவரிடமிருந்து வெற்று காசோலை

வாங்கிவைத்து தற்போது அவற்றை பூர்த்தி செய்து மோசடியாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. பிரதிவாதியை அச்சுறுத்தும் வகையில் வாட்ஸ்ப் நம்பர் மூலம் புகைப்படங்களை அனுப்பியுள்ளேன் என்றால் உண்மை கிடையாது அந்த வாட்ஸ்ப் எண் 8122887244 என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி மீது நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் வாணியம்பாடி காவல்நிலையத்தில் அதற்காக எந்த விசாரணைக்கும் போகவில்லை. பிரதிவாதி எனக்கு எந்த பணமும் கொடுக்கவேண்டியது கிடையாது என்றும் பிரதிவாதிக்கு எதிராக பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 29/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.29 17:05:51 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.